

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 31-05-2023

# குறித்து வைத்துக் கொள்ளுங்கள்!

புதிய நாடாளுமன்றத்தைத் திறந்து வைத்து பிரதமர் மோடி ஆற்றிய உரையை அனைவரும் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் அவர் அதிகப்படியாக ஜனநாயகம் பற்றியே பேசி இருக்கிறார்.

* இந்தியா ஒரு ஜனநாயக நாடு மட்டுமல்ல, இது ஜனநாயகத்தின் தாயும் கூட.
* இந்தியா இன்றைக்கு உலக ஜனநாயகத்துக்கு மிகப்பெரிய அடித்தளமாக அமைந்துள்ளது.
* ஜனநாயகம் என்பது ஒரு அமைப்பு மட்டுமல்ல, இது ஒரு கலாச்சாரம். ஒரு எண்ணம், ஒரு பாரம்பர்யம்.
* நமது ஜனநாயகம், நமக்கு மிகப்பெரிய உத்வேகம் அளிக்கிறது.
* நமது அரசியல் சாசனம், நமது உறுதிப்பாடு ஆகும்.
* நமது நாடாளுமன்றம் பிரதிநிதித்துவத்தின் வளமான கலாச்சாரத்தை நமக்கு அறிவிக்கிறது.
* இந்த நாடாளுமன்றக் கட்டடம் நமக்கு அளிக்கும் உத்வேகம் ஒன்றுதான், அது நாட்டு மக்களின் வளர்ச்சி.
* இந்தியா இன்னும் 25 ஆண்டுகளில் சுதந்திரத்தின் நூற்றாண்டை நிறைவு செய்ய இருக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் நாம் இந்தியாவை ஒன்று சேர்ந்து வளர்ந்த நாடாக்குவோம்.
* இன்றைக்கு ஏழ்மையில் இருந்து இந்தியா விரைவாக விடுபட்டு வருகிறது.
* இந்த நாடாளுமன்றக் கட்டடத்தில் அமருகிற ஒவ்வொரு எம்.பி.யும் ஜனநாயகத்துக்கு புதிய உத்வேகத்துடன், புதிய இலக்கை வழங்க முயற்சிப்பார்கள்.
* இந்த புதிய நாடாளுமன்றம் புதிய ஆற்றலை, புதிய சக்தியை உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுக்கு வழங்கும்.

**- இவை எல்லாம் பிரதமர் அவர்கள் பேசியது ஆகும். ஜனநாயகம்... ஜனநாயகம்... ஜனநாயகம்... என்றே முழங்கி இருக்கிறார். இந்த உரைகள் யாருக்கு ஜனநாயகத்தை உணர்த்த வேண்டுமோ அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அவருக்கே, அவரது பா.ஜ.க. கட்சிக்கே, அக்கட்சியின் தலைவர்களுக்கே ஜனநாயகத்தை உணர்த்தியாக வேண்டியதாக இருக்கிறது.**

இதே நாடாளுமன்றத்தில் நாட்டின் மிக முக்கியப் பிரச்சினைகளுக்கு விவாதம் நடத்தப்படவில்லை. பிரதமரால் உரிய பதில்கள் தரப்பட்டது இல்லை. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தன்மை என்பது என்ன?

**அமெரிக்காவின் நிதி ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் 24.1.2023 அன்று வெளிட்ட அறிக்கையில் அதானி நிறுவனங்கள் மீது ஏராளமான குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. முழுக்க முழுக்க பா.ஜ.க. தலைமையுடன் ஐக்கியம் கொண்ட நிறுவனம் இது. இவரது அசுர தொழில் வளர்ச்சி குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் அனைத்தும் கோரிக்கை வைத்தது. நாடாளுமன்றத்தில் முழக்கமிட்டார்கள். ஆனால் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டதா? பிரதமர் அவர்கள் பதில் அளித்தார்களா? இல்லை.**

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இந்திய வம்சாவளி மாணவர்கள் மத்தியில் பேசிய ராகுல் காந்தி, இந்திய ஜனநாயகம் பற்றி விமர்சித்து விட்டார் என்று சொல்லி அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் திசை திருப்பி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு இருந்தது பா.ஜ.க.

2015 ஆம் ஆண்டு மே மாதம் தென் கொரியா சென்றார் பிரதமர் மோடி. அப்போது, "இந்தியாவில் ஏன் பிறந்தோம் என ஒரு காலத்தில் மக்கள் கவலைப்பட்டார்கள்' என்று பேசினார் . தென்கொரியாவில் உள்ள இந்திய சமூகத்தினரிடம் பேசும் போது, "இதற்கு முன்பு என்ன பாவம் செய்தோம்? இந்தியாவில் வந்து பிறந்துவிட்டோம் என கடந்த காலங்களில் மக்கள் நினைத்துக் கொண்டு இருந்தார்கள். இதனால் அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறினார்கள். ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. வெளிநாடுகளில் அதிக ஊதியத்துடன் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்கள் இந்தியாவுக்கு திரும்ப வேண்டும் என்று விரும்புகிறார்கள்" என்று பேசினார். அப்படித்தான் ராகுல்காந்தியின் பேச்சும் அமைந்திருந்தது. ஆனால் இதை வைத்தே நாடாளுமன்றத்தில் தினமும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது பா.ஜ.க. அதாவது, ராகுல் காந்தியைக் குற்றம் சாட்டுவதன் மூலமாக அதானி பிரச்சினையை பேசுவதை திசைதிருப்ப முயற்சித்தார்கள்.

**மூன்று வேளாண் சட்டங்களை கொண்டு வரும் போதும் மக்கள் கருத்து கேட்கவில்லை. நாடாளுமன்றத்தில் விவாதம் இல்லை. ஒன்றரை ஆண்டுகள் தலைநகர் டெல்லியில் இரவுபகல், மழை வெயில் பாராமல் விவசாயிகள் போராடினார்கள். இறுதியாக சட்டமன்றத் தேர்தல்கள் நெருங்கி வருவதால் திரும்பப் பெற்றார்கள். திரும்பப் பெறும் போதும் நாடாளுமன்றத்தில் விவாதம் இல்லை.**

ஒரு நாள் நள்ளிரவில் 500, 1000 ரூபாய் நோட்டுகளை தடை செய்தார்கள். அதுவும் நாடாளுமன்றத்தில் விவாதம் இல்லை. உச்சநீதிமன்ற நீதிபதி நாகரத்தினா இதனைக் கண்டித்தார். 'இது தொடர்பாக ஏன் சட்டம் நிறைவேற்றவில்லை?' என்று நீதிபதி கேட்டார். அவசர சட்டம் போட்டிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி இருந்தார் நீதிபதி. நிர்வாக நடைமுறைப்படி பணமுடக்கம் மேற்கொண்டது தவறு என்றும் நாடாளுமன்றம் மூலம் சட்டம் இயற்றி அமல்படுத்தியிருக்க வேண்டும் என்றும் சொன்னார். இதற்கு முன்னால் இரண்டு முறை பணமதிப்பிழப்பு இந்தியாவில் நடந்துள்ளது. இரண்டு முறையும் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டினார் நீதிபதி.

**"நாடாளுமன்ற நடைமுறைப்படி பண முடக்கம் மேற்கொண்டிருந்தால் தான் அது ஜனநாயகத்துக்கு உட்பட்டதாக இருக்க முடியும். இதுபோன்ற முக்கிய முடிவுகள் எடுக்கும்போது நாடாளுமன்றத்தை ஒதுக்கி வைக்க முடியாது. மக்கள் பிரதிநிதிகள் முன் விவாதம் நடந்திருக்க வேண்டும்" என்பது நீதிபதி நாகரத்தினா எழுதிய வரிகள்.**

ரிசர்வ் வங்கியின் சட்டப்பிரிவு 26(2) இன் பணமதிப்பு இழப்பு என்பது நாடாளுமன்றத்தால் மட்டுமே செய்ய முடியும் என்பதை நீதிபதி சுட்டிக் காட்டி இருக்கிறார். ஒன்றிய அரசுக்கு அளவுக்கு மீறிய அதிகாரம் இல்லை என்பதையும் any - all ஆகிய இரண்டு சொற்களையும் வைத்து விளக்கி இருந்தார். இப்படி முக்கியமான அனைத்துப் பிரச்சினைக்கும் நாடாளுமன்றத்தையே பயன்படுத்தாதவர்தான் உணர்ச்சி பொங்க நாடாளுமன்றத்தின் கட்டடத்தை பார்த்து கண்ணீர் மல்கப் பேசி இருக்கிறார்.

**தனக்குத் தானே ஜனநாயகம் பற்றி வகுப்பெடுத்துக் கொண்டிருக்கிறது பா.ஜ.க. தான் பேசியபடி தானும், தனது கட்சியும் நடந்து கொள்ள வேண்டும்.**

## லாரியில் பயணம்!

## ராகுல் காந்தி ட்விட்டர் பதிவு!

புதுடெல்லி, மே 31 – காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி திங்கட்கிழமை லாரியில் பயணம் மேற்கொண்டார்.

டிரைவர்களின் மனதில் உள்ள குறைகளை நேரில் தெரிந்து கொள்வதற்காக டெல்லியில் இருந்து சண்டிகர் வரை 6 மணி நேரம் பயணம் செய்தார். லாரி டிரைவர்களுக்கு மத்தியில் அவர் அமர்ந்து இருக்கும் புகைப்படத்தை காங்கிரஸ் கட்சி வெளியிட்டு இருந்தது.

இந்த நிலையில் லாரியில் பயணம் செய்தல், டிரைவர்களுடன் உரையாடுவது தொடர்பான வீடியோவை ராகுல் காந்தி சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (29.5.2023) டோக்கியோவில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், ஷிமிசு (Shimizu Corporation) நிறுவனத்திற்கும் இடையே, கட்டுமானம், கட்டுமான பொறியியல் மற்றும் அதன் தொடர்புடைய வணிகத்தை தமிழ்நாட்டில் மேற்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஷிமிசு நிறுவனத்தின் துணை பொது மேலாளர் ஹிடோஷி இசாவா (Mr. Hitoshi Iizawa), துணை இயக்குநர் மட்சுனாகா கசுநோரி (Mr. Matsunaga Kazunori), ஜப்பான் நாட்டின் பல்வேறு நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பொறுப்புணர்ச்சியோடு எதிர்க்கட்சித் தலைவர் நடந்து கொள்ள வேண்டும்!

# தமிழ்நாட்டுக்குப் புதிய தொழிற்சாலைகள் கொண்டுவருவது முதல்வரின் நோக்கம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே 31-

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கண்டுள்ளபடி எதிர்க்கட்சித் தலைவர் தன் கடமையை ஆற்றிடவேண்டும் என்றும், ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் பேச்சும், நடைமுறையும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற கடமைக்கும், கண்ணியத்துக்கும் உகந்ததாக இல்லை என்றும் சுட்டிக்காட்டி திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

ஜனநாயகத்தில் அதுவும் சட்டமன்ற, நாடாளுமன்ற ஆட்சி முறையில், எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது மிக முக்கியமான பொறுப்பாகும்.

அவர் தன் கடமையை, ஆக்கப்பூர்வமாகவும், ஆதாரப்பூர்வமாகவும் செய்தால், அது நாட்டு நலனுக்குப் பெருமளவில் உதவிடுவதாகும்.

இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்ற முறைகளை யொட்டித்தான் நம் நாட்டில் ''அமைச்சரவை ஆளுமை முறை'' (*Cabinet System*) அரசமைப்புச் சட்ட கர்த்தாக்களால் உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவைப்போல் "அதிபர் ஆட்சி முறை'' (*Presidential System*) உருவாக்கப்படவில்லை.

இங்கிலாந்தில் பெரிதும் இரு கட்சிகள்தான் போட்டியில் எடுப்பாக எப்போதும் உள்ளவை.

எதிர்க்கட்சித் தலைவரை, அந்நாட்டு ஆட்சி முறையில் "*His Majesty's Loyal Opposition*" "மாட்சிமை தாங்கிய மன்னராட்சியின், விசுவாசமிக்க எதிர்க்கட்சித் தலைவர்" என்றே அழைப்பர்.

**எதிர்க்கட்சித் தலைவருக்கு உரிய தகுதி!**

நம் நாட்டு ஜனநாயகத்தில் ஆட்சியில் எதிர்க்கட்சித் தலைவருக்கு கேபினட் அமைச்சர் தகுதி, ஊதியம், இல்லம் மற்ற வசதிகள் எல்லாம் தரப்படும் பதவியாகவே கருதி நடத்தும் முறையே செயற்பாட்டில் உள்ளது.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது சட்டமன்றத்திலும், மாண்புக்குரிய பொறுப்புமிக்க பதவி. ஆனால், மேனாள் முதலமைச்சராக இருந்த ஒருவர், அதனை மக்கள் தீர்ப்பாகவே ஏற்று கடமையாற்ற வரும்போது, அப்பொறுப்பில் பொதுவானவர்கள் மெச்சி, பாராட்டும்படி நடந்து சாதனை சரித்திரம் படைக்க வேண்டும்.

தமிழ்நாட்டில், சட்டமன்ற வரலாற்றில் அண்ணா, கலைஞர் போன்ற 'திராவிட மாடல்' ஆளுமையாளர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பில் இருந்து முத்திரை பதித்துள்ளனர்!

எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஆளுங்கட்சிக்கு 'லாலி' பாடுவது அல்ல என்று தொடக்கத்திலேயே சொல்லி, தமது பணியைத் தொடங்கிய நிலையிலும், பல பொதுப் பிரச்சினைகளில் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்று பிரித்துப் பார்க்காமல் கடமையாற்றி உள்ளனர்!

அண்ணா காலத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சும் முதலமைச்சர் அண்ணாவின் பதிலும்!

ஆத்திரமூட்டும் சில பேச்சுகளை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் போன்றவர்கள் (கே.விநாயகம், காங்கிரஸ்) அவையில் பேசினர். உடல்நலம் குன்றிய நிலையிலும் கடமையாற்றிய முதலமைச்சர் அறிஞர் அண்ணாவைப் பார்த்து, ஆங்கிலத்தில் உள்ள ஒரு சொல்லாட்சியை "*Your Days are Numbered*" "உங்கள் இறுதி நாட்கள் எண்ணப்படுகின்றன'' என்று சொன்னபோது, பலரும் கொதித்தனர்.

ஆனால், முதலமைச்சர் அறிஞர் அண்ணா மிக அமைதியாக, "*My Steps are measured*'' "என்னுடைய ஒவ்வொரு அடியும் அளந்து வைக்கப்படுபவை"எனவே, தடுமாற்றம், சறுக்கல், வழுக்கல், தோல்வி ஏற்படாது பயணம் தொடரும் என்று கருத்தடங்கிய வாசகங்களை அழகான பதிலாகக் கூறினார் பதற்றமில்லாமல்!

அதுபோல, கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதும் எதிர்க்கட்சித் தலைவரது கடும் விமர்சனங்களுக்குக்கூட, சூட்டைத் தணிக்கும் பதிலாகவே கூறி, கண்ணியத்துடன் கடமையாற்றி உள்ளார்!

ஆனால், இன்று தமிழ்நாட்டில் எதிர்க்கட்சித் தலைவராக உள்ள எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், தாம் மேனாள் முதலமைச்சர் பதவி வகித்தவர் என்ற நிலைப்பாட்டைக் கூட மறந்துவிட்டு அல்லது "துறந்துவிட்டு'', இன்றைய முதலமைச்சர்மீது பொறுப்பற்ற குற்றச்சாட்டுகளைக் கூறி, தமது பதவியின் பொறுப்பை சிறுமையாக்கி விடுகிறார்! அப்பதவிக்கும் பெருமை சேர்க்கத் தவறியவராகவே உள்ளார்.

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பயணத்தைக் கொச்சைப்படுத்துவதா?**

தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கி, தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தை வளர்த்தெடுக்க வெளிநாட்டுத் தொழில்களை தமிழ்நாட்டிற்கு அழைத்துவரும் அரிய பணிக்காக, அண்மையில் சிங்கப்பூர், ஜப்பான் முதலிய நாடுகளுக்குப் பயணமாகி, அங்குள்ள பல தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய நேரில் அழைப்பு விடுத்துத் திரும்பத் திட்டமிட்டு, (ஒன்றிய அரசு அனுமதியோடு) செல்கிற பொழுது, அது தமிழ்நாட்டின் பொதுநலப் பிரச்சினை, வளர்ச்சிப் பிரச்சினை என்பதைக்கூட 'வசதியாக' மறந்துவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சர் சுற்றுப்பயணத் திட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் புரிந்துணர்வு ஏற்பாடுகள் எதுபற்றியும் கவலைப்படாமல், சற்றும் பொறுப்பின்றி "முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தாமே முதலீடு செய்யச் செல்லுகிறாரா? முதலீடுகள் செய்வோரை அழைக்கச் செல்லுகிறாரா?'' என்று கேள்வி கேட்பதை அரசியல் அறியாமையின் உச்சம் என்றுதானே உலகம் பழிக்கும்? புரிந்து கொள்ள வேண்டாமா?

நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரகசியமாகவா சென்றுள்ளார்? தனியாகச் சென்றுள்ளாரா?

அரசின் தலைமைச் செயலாளர், தொழில்துறை செயலாளர், மூத்த அய்.ஏ.எஸ். அதிகாரிகள் மற்ற அதிகாரிகள் மற்றும் பல முக்கிய அதிகாரிகள் உடன் சென்றுள்ள நிலை வெளிப்பாடல்லவா? முதலமைச்சர் முதலீடு செய்யச் சென்றால், இவர்களையெல்லாம் உடன் அழைத்துச் சென்றுதானா முதலீடு செய்வார்?

குறைந்தபட்ச பகுத்தறிவு உள்ளவர்கள் இந்தக் கேள்வியை கேட்கமாட்டார்களா?

அங்குள்ள புலம்பெயர் மக்களின் அன்பில் மிதந்துள்ளாரே!

அதுமட்டுமல்ல; எடப்பாடியார் முதலமைச்சராக இருந்தபோது, ஆளுநர் மாநில ஆட்சி உரிமைக்கு எதிராக நடந்தபோது, ஆட்சி அதிகாரத்தில் தலையிட்டு போட்டி அரசு போல் நடக்க முயன்ற போது, எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் எப்படி நடந்துகொண்டார்?

தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டினைப் பலப்படுத்தி, தனது கட்சியை அறப்போர் நடத்திட வைத்தார் கண்டனம் செய்து காப்பாற்றினார்!

பழைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அதன்பிறகு தன் அடாவடி நடவடிக்கையை நிறுத்திக் கொண்டார்; அதுபோலவே, சில மசோதாக்களுக்கு (தீர்மானங்கள்) ஆளுநர் நிலைப்பாட்டுக்கு எதிராக ஆட்சியின் கொள்கையளவில் தனது நிலைப்பாட்டை எதிர்க்கட்சி என்ற தகுதியில், ஆக்கப்பூர்வ ஆதரவும் தந்தாரா, இல்லையா?

ஆனால், ''அண்ணா தி.மு.க.'' என்று தங்கள் கட்சியின் பெயர் எதற்கு வைக்கப்பட்டது? என்பதுகூடப் புரியாமல், அண்ணா கொள்கையும் தெரியாது, எம்.ஜி.ஆர். ஆர்.எஸ்.எஸ்.பற்றி (பா.ஜ.க. பற்றி) எடுத்த நிலைப்பாட்டினையும் அறியாது, ஜெயலலிதா அவர்கள், "லேடியா மோடியா?'' என்று கேட்டதையும் அலட்சியப்படுத்தி, ''டில்லி சரணம், சரணம் சரணம்'' என்று நெடுஞ்சாணாக சரணம் பாடி, சிதறு தேங்காயாக கட்சியை உடைத்த பா.ஜ.க.விடமே போட்டி போட்டு 3, 4 பிரிவுகளும் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு, 'மடியில் கனம்; எனவே, வழியில் பயம்'' முடிவு கட்சியை கொள்கையை அடமானம் வைத்து, தமது வருமானத்திற்குப் பாதுகாப்புத் தேடும் நிலையில், இப்படிப் பேசுவதா எதிர்க்கட்சித் தலைவர் வேலை?

'திராவிட மாடல்' என்பதைக்கூட கேலி பேசுவதா?

பா.ஜ.க.வால் பிளக்கப்பட்ட இவர்கள் ஒருவர் மற்றவர்மீது கூறும் ஊழல் குற்றச்சாட்டுகளை கொள்ளைகளைத் தொகுத்துக் கொடுத்தாலே போதுமே, தனியாக ஏதும் கண்டுபிடிக்க வேண்டியதே இல்லையே!

இனியாவது பொறுப்பை உணர்ந்து எதிர்க்கட்சித் தலைவரும், அவரது பல அணியினரும் நடந்துகொள்வது அவர்களுக்கு நல்லது!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## 16வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் தோனி என்ற மனிதனின் கீழ்

# "சாம்பியன்" பட்டம் வென்ற மஞ்சள் படைக்கு வாழ்த்துக்கள்!


## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, மே 31-

16-வது ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் குஜராத் - சென்னை அணிகள் மோதின. முடிவில் குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் சென்னை அணி வெற்றி பெற்று 5வது முறையாக கோப்பையை கைப்பற்றியது.

இந்நிலையில் ஐ.பி.எல். கோப்பையை வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் மஞ்சள் படைக்கு வாழ்த்துக்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டரில்,



**"ஒவ்வொரு சூழ் நிலைக்கும் ஒரு திட்டத்துடன் தோனி என்ற மனிதனின் கீழ் 5வது ஐ.பி.எல். கோப்பையை வென்ற சி.எஸ்.கே.யின் மஞ்சள் படைக்கு வாழ்த்துக்கள்.**

**இது மிகச் சிறந்த கிரிக்கெட் போட்டி. இதில் நெருக்கடியான சூழலை எதிர் கொண்ட ஜடேஜா சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு ஒரு வரலாற்று வெற்றியை உறுதிப்படுத்தினார்**" என்று அதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சேலம் மாவட்டத்திற்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட 11.06.2023 அன்று வருகை தரவுள்ளதையொட்டி சேலம், கருப்பூர் பொறியியல் கல்லூரி மைதானத்தில் விழா முன்னேற்பாடு பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (30.05.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், மாநகர காவல் ஆணையர் திருமதி விஜயகுமாரி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சீ.பாலச்சந்தர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.